LIBRARY
20 JUL 1965
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 4th March 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Report of the Bonus Commission

* 142 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a copy of the Report of the Bonus Commission was received from the Union Government;

(*b*) whether a copy of the same will be placed on the table of the House; and

(*c*) whether any instructions have been received from the Government of India regarding the implementation of the recommendations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) It is regretted that it would not be possible to place copies of the Bonus Commission's report on the table of the House, as it is a Government of India publication.

(*c*) The decision of the Government of India on the report has been received, and was republished in the *Fort. St. George Gazette*, dated 28th October 1964. A copy[a] of it is placed on the table of the House. No specific instructions have been received from the Government of India about the implementation of the recommendations.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்த போனஸ் கமிஷன் மத்திய அரசாங்கத்தாலே நியமிக்கப்பட்டு மத்திய அரசினாலே அறிக்கை வெளியிடப்பட்டபோதிலும், இது தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்னை என்ற அடிப்படையிலே பார்க்கும் பொழுது ராஜ்ய சர்க்காருக்கும் பொறுப்பு உண்டு. அதை அமல் நடத்தும் பொறுப்பும் ராஜ்ய சர்க்காருக்கு இருக்கிறபடியால், அது சம்பந்தமான அறிக்கையின் விவரங்களை இந்த சபைமுன் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அறிக்கையைப் பொறுத்த மட்டில் இது மத்திய அரசின் அறிக்கை, இதைக் கொடுப்பதற்கில்லை. மத்திய அரசாங்கத்தின் முடிவின்பேரில் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றும் வகையில் ஒரு மசோதா

---

a Printed as Appendix on page 416.

தயாரிக்கப்பட்டுவருகிறது. டிசம்பர் 9, 10 தேதிகளில் இந்த மசோதா விவாதிக்கப்பட்டது. இந்த பில் ஒரு சப்-கமிட்டிக்கு பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் முடிவின்படி நடந்துகொள்ளவேண்டும் என்று தொழிலாளர் கமிஷனர் அவர்கள் அதை இருதரப்பார்களும் ஒப்புக்கொள்ளும் வகையிலே கவனம் செலுத்துவார்கள்.

Adult Literacy Programme

*143 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the present stage of the progress in Adult Literacy Programme; and

(b) the details of expenditure incurred during the Third Five-Year Plan period so far, for the promotion of Adult Literacy?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The programme in the Third Plan has so far not been implemented.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்தத் திட்டத்தை அமல் நடத்த தவறியதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தத் திட்டத்தைப்பற்றி மத்திய அரசாங்கத்துடன் விவாதித்தபோது அவர்கள் 'பிளான் சீலிங்கிற்கு அப்பாலே முழு உதவியும் அளிக்கிறோம்' என்று சொன்னார்கள். அந்த வகையிலே என்ன உதவி கிடைக்கும் என்று கோரப்பட்டது. ஆனால் மத்திய அரசாங்கம் அதற்கு மேல் ஒரு முடிவும் தெரிவிக்கவில்லை. அதனால்தான் அவைகள் நிறைவேற்றப்படவில்லை. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டில் திட்டத்திலே 20 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது. 300 அடல்ட் லிட்ரசி பள்ளிக்கூடங்கள் அமைக்க லாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன்: மத்திய அரசாங்கத்தினுடைய உதவி கிடைக்காவிட்டாலும் நம்முடைய கல்வி நிதியிலிருந்து ஒரு கணிசமான தொகையை சாத்தியமான அளவிற்கு ஒதுக்கி அதை மேற்கொள்வதற்கு சாத்தியம் இருக்கிறது என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்த்ததா, அப்படியிருந்தால் அதன் முடிவு என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் தெரிவிக் கின்ற அடிப்படையிலே அடுத்த ஆண்டிலே 300 பள்ளிக்கூடங்கள் திறக்கலாம் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: திட்டக் கமிஷன் குறிப்பிட்டபடி இந்த முதியோர் கல்வி திட்டத்தின் விவரம் என்ன? இப்போது அரசாங்கம் அமலாக்கக்கூடிய திட்டத்தின் விவரம் என்ன?